# கருணையே இறைவா உன்

கருணையே இறைவா உன்
கரங்களில் தவழ்ந்தேன்
பரமனே முதல்வா உன் பதமலர் பணிந்தேன்
ஏற்றிடுவாய் ஏற்றிடுவாய் உனதாக மாற்றிடுவாய்

1
கோதுமை அப்பத்தையே - உன்
தாழ்களில் படைத்து நின்றேன்
உம் உடலாக இவை மாறவே
நான் அருள்தனை வேண்டி நின்றேன்
உடல் பொருள் அனைத்தையும்
உவப்புடன் அளிக்கிறேன் - இவை ஏற்றிடுவாய்

2
திராட்சை ரசத்தினையே - உன்
திருவடி படைத்து நின்றேன்
உம் ரத்தமாய் இவை மாறவே –
நான் இரக்கத்தை வேண்டி நின்றேன்
அமைதியின் மன்னனே
நீதியின் கதிரோனே - எனை ஏற்றிடுவாய்